நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஜ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 145/2013

**<u>அ.சா:20 (LW 28) சாட்சியின் சான்றுரை</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இராமசந்திரன். | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

11.02.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.
---------------------------------------------------------------------------

(3, 4, 5 எதிரிகள் ஆஜர், 13வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். (12வது எதிரி Split up SC 1/2026) 1, 2, 6 முதல் 11வது எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2, 6 முதல் 11வது எதிரிகள் தரப்பில் சட்டப்பிரிவு 355 BNSS Actன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 02.50 பி.ப**

நான் தற்பொழுது தூத்துக்குடி மாவட்டத்தில் குற்ற ஆவண கூடத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2009ம் ஆண்டு குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு பிரிவு கள்ளநோட்டு தடுப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றியபோது 10.08.2009ம் தேதி காவல் துறை தலைமை அலுவலக RC No.047530/Crime 3(1)/2009 Dated: 17.04.2009 மற்றும் CBCID SP Special Unit RC


SARAVANAKUMAR.G.N
Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.02.11 17:59:01 +0530

No.C4/375/008927/2007 Dated: 07.05.2009 ஆகியவற்றின் படி DSP CBCID CCW C No.02/CBCID/CCW/MDU/2009 Dated: 10.08.2009 உத்தரவுப்படி தேனி அல்லிநகர காவல் நிலைய குற்ற எண்.847/2008 ச/பி.120(b), 489(A), 489(B), 489(C), 489(D) and 420 IPC வழக்கின் கோப்பை காவல் ஆய்வாளர் கோபிநாத் பாண்டியன் அவர்கள் ஒப்படைத்ததை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். வழக்கு கோப்பை பரிசீலனை செய்தேன். அன்றைய தினமே இவ்வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விபரத்தை நீதிமன்றத்திற்கு அறிக்கையாக அனுப்பி வைத்தேன். 24.08.2009ம் தேதி இவ்வழக்கின் சாட்சிகள் முத்துபிரேம்சந்த், மயில்சாமி, செல்லம், அப்பாஸ், முருகன், செல்வம், செந்தில்குமார், வனகாமு, வீராசாமி, குபேந்திரன், முத்து (எ) வெடி முத்து ஆகியோர்களை விசாரித்தேன். அவர்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள வாக்குமூலங்களில் கண்ட சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள் பற்றி கூறியதால் அவர்களின் மறு வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை. மேற்படி சாட்சிகளில் வழக்கு ஆவணங்களில் கையொப்பம் இட்டுள்ள சாட்சிகள் அனைவரும் முறையே தங்களது கையெழுத்துகளை அடையாளம் கண்டு தங்களுடையதுதான் என்று கூறினார்கள். அதன் பிறகு இவ்வழக்கின் தலைமறைவு எதிரிகளை தேடி வந்தேன். 22.12.2009ம் தேதி இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள இவ்வழக்கின் தடய சொத்துகளை தடய அறிவியல் பகுப்பாய்வகத்திற்கு பகுப்பாய்விற்கு அனுப்புவதற்காக வேண்டுகோள் கடிதம் தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த வேண்டுகோள் கடிதத்தின் படி 29.06.2010ம் தேதி நீதிமன்றத்தின் உத்தரவு கடிதம் பெற்று வழக்கின் தடய சொத்துகள் தடய அறிவியல் ஆய்வகம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி, தடய சொத்துகள் 30.06.2010ம் தேதி தடய அறிவியல் ஆய்வகத்தில் Phy/180/2010ன் படி ஒப்படைக்கப்பட்டது. ஒப்புகை பெற்று வழிக்காவல் அனுப்பப்பட்ட காவலர்கள் 01.07.2010ம் தேதி அறிக்கை செய்தார்கள். அதன் பிறகு 18.07.2011ம் தேதி நீதிமன்றத்தில் உத்தரவு கடிதம் பெற்று காவல் வாகனம் மூலம் சென்னை சென்று 21.07.2011ம் தேதி சென்னையில் இரவு தலைமையகத்தில் தங்கியும் 22.07.2011ம் தேதி இவ்வழக்கின் தடய சொத்துகளையும் வழக்கின் தடய சொத்துகள் மீதான ஆய்வறிக்கையையும் பெற்று அன்றைய தினமே நீதிமன்த்திற்கு


SARAVANAKUMAR.G.N
Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.02.11 17:59:08 +0530

கொண்டு வந்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. 23.07.2011ம் தேதி இப்பணிக்காக நியமிக்கப்பட்ட காவலர் விவேக் மற்றும் தங்கவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.07.2011ம் தேதி சாட்சிகள் மனோகரன், அனுசுயா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.08.2011ம் தேதி வழக்கின் தடய சொத்துகள் மீது பகுப்பாய்வு மேற்கொண்ட இளநிலை அறிவியலாளர் திரு.வேலுசாமி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய ஆய்வறிக்கையை பரிசீலனை செய்தேன். அவர் தனது ஆய்வறிக்கையில் வழக்கில் கைப்பற்றப்பட்ட ரூபாய் நோட்கள் கள்ள ரூபாய் நோட்கள் என்றும் மேற்படி கள்ள ரூபாய் நோட்கள் வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள தடய சொத்துகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். 13.08.2011ம் தேதி எனக்கு பணியிட மாறுதல் உத்தரவு பெறப்பட்டதால் வழக்கு கோப்பினை குற்றப்பிரிவு புலனாய்வு துறையில் ஒப்படைத்து சென்றேன்.

<u>1 முதல் 11 மற்றும் 13 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

வழக்கு கோப்புகளை புலன் விசாரணைக்காக பெற்றுக்கொண்டதற்கான எந்த விதமான ஆவணமும் அல்லது உத்தரவோ வழக்கு கோப்பில் இல்லை என்றால் சரியல்ல. நான் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்றுக்கொண்டதாக குறிப்பிட்டுள்ள தேதியில் நான் ஆவணங்களை பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல உரிய அலுவல் சார் உத்தரவின் அடிப்படையில் பெற்றுள்ளேன். RC No.047530/Crime 3(1)/2009 Dated: 17.04.2009 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 10.08.2009ம் தேதி ஒப்படைக்கப்பட்டது என்றாலும் ஏறத்தாழ 114 நாட்கள் காலதாமதமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் மேற்படி அலுவலக உத்தரவு குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு அலுவலகத்திற்கு பெறப்பட்டு காவல் கண்காணிப்பாளர் சிறப்பு பிரிவு அவர்கள் உத்தரவு பிறப்பித்து பின்னிட்டு தேனி மாவட்டத்திலிருந்து வழக்கு கோப்பானது தறுவிக்கப்பட்டு காவல் துணை கண்காணிப்பாளர் CBCID CCW அவர்களால் பெறப்பட்டு அவர்கள் உத்தரவின் பேரில் வழக்கு கோப்பு என் வசம் ஒப்படைக்க ஏற்பட்ட தாமதமாகும். 10.08.2009 தேதியில் வழக்கு கோப்பில் விசாரணை


Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.02.11 17:59:14 +0530

மேற்கொண்டதற்கு எந்த விதமான ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சி பட்டியலில் வரிசை எண்.28 எந்தெந்த சாட்சிகள் மேல் விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரித்தது சம்பந்தமாக என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் யார்யார் எந்தெந்த தேதியில் விசாரணை செய்தேன் என்பது பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல 24.08.2009ம் அன்று எந்தெந்த சாட்சிகளை விசாரணை செய்தேன் என்று எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். என்னால் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் 161 கு.வி.மு.ச பிரிவின் வாக்குமூலங்கள் எதுவும் தயார் செய்யப்படவும் இல்லை வழக்கு கோப்பில் தாக்கல் செய்யவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு சம்பந்தமாக சாட்சி பட்டியல் எண்.21 விவேக்குமார் காவலர் 456 மற்றும் சாட்சி பட்டியல் எண்.23 தங்கவேல் காவலர் 344 என்ற இருவரை மட்டும்தான் விசாரணை செய்ததாக வழக்கு கோப்பு ஆவணங்களிலிருந்து தெரிய வருகிறது என்றால் சரியல்ல. சாட்சி பட்டியல் எண்.24 மற்றும் எண்.25 ஆகிய நீதிமன்ற தலைமை எழுத்தர் சாட்சியங்களுடைய வாக்குமூலங்களை நான் பதிவு செய்யவில்லை என்றாலும் வழக்கு கோப்பில் அவர்களுடைய வாக்குமூலங்கள் உள்ள நிலையில் அதற்கு எந்த விதமான ஆவணமும் எந்த தேதியில் எங்கு விசாரித்தேன் என்பதற்கான எந்த வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சி பட்டியல் எண்.26 திரு.வேலுசாமி, தடய அறிவியல் ஆய்வக பகுப்பாளரை நான் விசாரணை செய்யவில்லை என்றாலும் அவருடைய வாக்குமூலம் பெயரளவிற்கு சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சி பட்டியல் எண்.27 திரு.கோபிநாத் பாண்டியன், காவல் ஆய்வாளர், அல்லிநகர காவல் நிலையம் அவரை எங்கு எந்த தேதியில் எப்பொழுது விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்பது குறித்து அலுவல் சார்ந்த பணியாளரை விசாரணை மேற்கொண்டது சம்பந்தமாக எந்தவித ஆவணமும் அலுவலக குறிப்பும் வழக்கு கோப்பில் இல்லை என்றாலும் பெயரளவிற்கு வழக்கை வலுவு சேர்ப்பதற்காக இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தனியறிக்கை தாக்கல் செய்த சாட்சி பட்டியல் எண்.1 திரு.முத்து பிரேம்சந்த், குற்றப்பிரிவு சார்பு ஆய்வாளர், ஆண்டிபட்டி காவல் நிலையம் அவர்களுக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை என்றாலும் அவர் தனியறிக்கை

தாக்கல் செய்த நபரே புலன் விசாரணை செய்வது என்பது இயற்கை நீதிப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் கு.வி.ந.ச மற்றும் காவல் நிலை ஆணைப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவமானது எந்த தேதியில் எந்த நேரத்தில் நடைபெற்றது என்பது எனது புலன் விசாரணையில் எவ்வாறு தெரிய வந்தது என்றால் முதல் தகவல் அறிக்கையின்படி 16.11.2008 அன்று 19.00 மணிக்கு நடைப்பெற்றதாக உள்ளது. அல்லிநகர காவல் நிலைய காவல் ஆய்வாளருக்கு எப்பொழுது எந்த தேதியில் எத்தனை மணிக்கு தகவல் கிடைத்ததாக தங்களது புலன் விசாரணையில் தெரிய வந்தது என்றால் 16.11.2008 அன்று 21.00 மணிக்கு தெரிய வந்தது. முதல் தகவல் அறிக்கையில் காலதாமதம் குறித்து பதிவு செய்யப்பட வேண்டிய காலம் 8ல் எந்தவிதமான காரணமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சாட்சி பட்டியல் எண்.1வது சாட்சியான பிரேம்சந்த் அவர்கள் அளித்த தனியறிக்கையிலும் காலதாமதம் குறித்து எந்தவிதமான காரணமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல முதல் கட்ட விசாரணை முடித்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதாக அவர் தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். ஒப்புதல் வாக்குமூலமான (அ.சா.ஆ.8ன்) சாட்சிகளான சாட்சி பட்டியல் எண்.4, சாட்சி பட்டியல் எண்.5 இருவரும் அல்லிநகர காவல் நிலையத்திலிருந்து தொலை பேசி மூலமாக 16.11.2008ம் தேதி இரவு 08.30 மணிக்கு காவல் நிலையத்திற்கு வரச்சொன்னதன்பேரில் 16.11.2008ம் தேதி இரவு 08.45 மணிக்கு காவல் நிலையம் வந்துவிட்டோம் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சமூக நீதிமன்றத்தில் அ.சா.3 மற்றும் அ.சா.6 அவ்வாறே சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. இவ்வழக்கில் printed FIR 16.11.2008ம் தேதி இரவு 09.00 மணியளவில்தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் ஆய்வாளருக்கு தனியறிக்கை தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை காலம் 6ல் குறிப்பிடப்பட்டுள்ள முத்து பிரேம்சந்த் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் மற்றும் நேரம் வழக்கு சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அதன் தொடர் நடவடிக்கைகள் குறித்த நாள் மற்றும் நேரம் முன்னுக்கு பின் முரண்பாடாக உள்ளதால் முதல் தகவல் அறிக்கை

பதிவு செய்யப்பட்டது குறித்து சந்தேகம் எழுகிறது என்றால் சரியல்ல. சாட்சி பட்டியல் எண்.26(அ.சா.18) திரு.வேலுசாமி, இளநிலை அறிவியாளர் அவர்கள் என்னுடைய விசாரணையின்போது ஆங்கிலத்தில் வாக்குமூலம் அளித்தாரா அல்லது தமிழ் மொழியில் அளித்தாரா என்றால் ஆங்கிலத்தில் அளித்தார். இவ்வழக்கு சம்பந்தமாக கைப்பற்றப்பட்ட எலக்ட்ரானிக் டிவைசஸ் ஆய்வக ஆய்விற்கு இரண்டரை ஆண்டுகள் கழித்துதான் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டரை ஆண்டுகளுக்கு மேலிட்டு ஆய்வக ஆய்விற்கு அனுப்பப்பட்டுள்ள எலக்ட்ரானிக் சம்பந்தப்பட்ட டிவைஸில் password சரியாக உள்ளீடு செய்வதற்கு போதுமான வாய்ப்பு இருக்காது மற்றும் அதனை இயக்கி பரிசோதிக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. எனது புலன் விசாரணையில் இவ்வழக்கு சம்பந்தமாக கைப்பற்றப்பட்ட எலக்ட்ரானிக் டிவைசுக்குண்டான password எதுவும் பெறப்படவில்லை என்றாலும் அது சம்பந்தமான எந்த வித புலன் விசாரணையும் மேற்கொள்ளவிலை என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவம் குறித்து பொதுவாக வரைபடம், பார்வை மகஜர் ஆகிய ஆவணங்கள் தயார் செய்வது வழக்கம் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவ இடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும் அது சம்பந்தமான ஆவணங்கள் வழக்கு கோப்பில் இல்லை என்றாலும் சரிதான். இவ்வழக்கு சம்பந்தமாக கைப்பற்றப்பட்ட எலக்ட்ரானிக் டிவைஸ்கள் இயக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட மின்சாரமானது வணிக வளாகத்திற்கு உபயோகப்படுத்தக்கூடிய மின் இணைப்பு வகையான டேரிக் 1, டேரிக் 5 அல்லது வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடிய மும்முனை இணைப்பு சம்பந்தப்பட்டதாக குறித்து எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 பிரேம் சந்த் அவர்கள் அளித்த தனியறிக்கையில் செய்துள்ள கையொப்பம் குறித்து புலன் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். தமிழ் எழுத்துகளை கொண்டு கையொப்பம் செய்துள்ளார். பதிவு செய்யப்பட்டுள்ள printed FIRலும் தமிழிலும் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 அரசு அதிகாரியாக இருப்பதால் தமிழிலோ அல்லது ஆங்கிலோத்திலோ ஏதாவது ஒரு மொழியில் கையொப்பம் போட உரிமை உள்ளதா என்றால் உள்ளது. அவர் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள

அவருடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அவருடைய கையொப்பமா என்றால் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. அவர் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் முதல் தகவல் அறிக்கையில் (printed FIR) தமிழில் உள்ள கையொப்பமும் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் உள்ள ஆங்கில கையொப்பமும் தன்னுடையதுதான் என சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அவருடைய கையொப்பம் பற்றி அவர்தான் விளக்கம் அளிக்க இயலும் என்னால் அளிக்க இயலாது. இவ்வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்ட தடய அறிவியல் ஆய்வக வேதியியல் பகுப்பாளரான சாட்சி பட்டியல் எண்.26 (அ.சா.18) ஆகிய வேலுசாமி அவர்கள் எந்த அசல் ரூபாய் நோட்டின் எண்ணினை குறிப்பிட்டு இவ்வழக்கு சம்பந்தமாக கைப்பற்றப்பட்ட ரூபாய் நோட்டுகளுடைய எண்களை ஒப்பிட்டு பார்த்தார் என்று தன்னுடைய ஆய்வறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல அவர் ஒவ்வொரு நோட்டினுடைய எண்ணை குறிப்பிட்டுள்ள நிலையில் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட அசல் ரூபாய் நோட்டுடைய எண்ணை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு பின்னிட்டு சென்னையில் உள்ள வேதியியல் பகுப்பாய்வாளர் ஆய்விற்கு தடயவியல் அறிவியல் அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்ட இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சம்பந்தமான கடவூச்சீட்டு மற்றும் அலுவல் சார்ந்த தகவல் தொடர்பு சம்பந்தமான எந்தவொரு ஆவணமும் இவ்வழக்கு கோப்பில் இணைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் மேற்கொண்ட மேல் விசாரணை எதுவும் சரிவர செய்யப்படவில்லை என்றாலும் இவ்வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றப்பிரிவுகளில்தான் குற்ற இறுதியறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல கூடுதலாக 120(b), 201, 109 ஆகிய பிரிவுகள் குற்ற இறுதியறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. குற்ற மாறுதல் சம்பந்தமாக எந்த ஆவணமும் வழக்கு கோப்பில் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பந்தமாக கைப்பற்றப்பட்ட கள்ள ரூபாய் நோட்டுகளை பயன்படுத்தி யாருடைய நலனை மற்றும் அவர்களுடைய நம்பக தன்மைக்கு பங்கம் விளைவித்ததாகவோ குந்தகம் ஏற்பட்டதாகவோ எந்த நபருடைய


SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.02.11 17:59:42 +0530

வாக்குமூலத்தையோ சாட்சியத்தையோ இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பந்தமாக கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களான எலக்ட்ரானிக் டிவைசஸ் எவையும் எதிரிகளுக்கு சொந்தமானது என்பது குறித்து புலன் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. சான்று பொருளா எலக்ட்ரானிக் டிவைசஸை உற்பத்தி செய்த மற்றும் விற்பனை செய்த நிறுவனங்களிலிருந்து அந்த பொருட்களை யார் வாங்கினார்கள் என்பது குறித்த புலன் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. எலக்ட்ரானிக் டிவைசுனுடைய உற்பத்தி நிறுவனம் மற்றும் தயாரித்த நிறுவனம் குறித்த எந்தவொரு விபரமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட எலக்ட்ரானிக் டிவைஸ் எந்தவொரு எதிரியும் தங்களுக்கு சொந்தமானது என அதை தங்கள் வசம் ஒப்படைக்க வேண்டி மனு எதுவும் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் என்னுடைய புலன் விசாரணை காலத்தில் எந்தவொரு வேண்டுகையும் முன் வைக்கவிலலை. இவ்வழக்கு சம்பந்தமாக முன்னிலைப்படுத்தப்பட்ட எலக்ட்ரானிக் டிவைஸ் மற்றும் பணம் (கள்ள பணம்) எவைக்கும் இந்த எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் வழக்கிற்காக பின்னிட்டு ஜோடிக்கப்பட்ட உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கானது ஒவ்வொரு மாவட்டத்திலும் கள்ள நோட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற புள்ள விபர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 04.12 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.02.11 17:59:47 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:11.02.2026